## மீன் வளம்

## இனம் - 5

மீன் உற்பத்தியைப் பெருக்குவதாலும் வேலை வாய்ப்பு அளிப்பதாலும் உள்நாட்டு மற்றும் கடல் மீன் வளம் மீன்துறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இம்மாநிலம் 1000 கிலோ மீட்டர் கடற்கரையைக் கொண்டிருக்கின்றது. அதில் 5.3 இலட்சம் மக்கள் தொகையும் 442 மீனவ கிராமங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களில் 2.52 இலட்சம் மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டு உள்ளனர். அவர்கள் 25,000 கட்டு மரங்களையும், 13724 வள்ளங்களையும், 8230 விசைப் படகுகளையும், 6800 இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளையும் இயக்குகின்றனர். உள்நாட்டு மீன்வளம் சம அளவில் முக்கிய பங்காற்றுகின்றது. மீன் வளர்ப்புக்காகக் குறிப்பிட்ட கால அளவுக்குட்பட்ட நீர்வரத்து வாய்ப்புள்ள 52 பெரும் நீர் தேக்கங்களும் பெரும் எண்ணிக்கையான குளங்களும் உள்ளன. உள்நாட்டு மீனவர்கள் 50530 பேர் உள்ளனர்.

02. 1994 – 95ல், உள்நாட்டு மீன் உற்பத்தியானது 1.08 இலட்சம் டன்களாகவும், கடல் மீன் உற்பத்தியானது 3.31 இலட்சம் டன்களாகவும் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக உவர் நீர் உயிரின வளர்ப்பும் கடல் உயிரின வளர்ப்பும் வளர்ச்சியடைந்துள்ளது. உவர் நீர் உயிரின வளர்பபுக்கும் கடல் உயிரின வளர்ப்புக்குமாகி தற்பொழுது 860 ஹெக்டேர் நீர் பரப்பு உள்ளது. இரால் மீன் உற்பத்தியானது 1994 – 95இல் 270 டன் அளவில் இருந்தது.

03. உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்காக பின்வரும் நடிவடிக்கைகள் அரசால் செயல்படுத்துப்பட்டு வருகின்றன.

1) மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றிற்கான திட்டம்.

2) மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை அமைத்து பராமரித்தல்

3) மீன் பிடிப்புக்கான் உரிமம் காலத்தில் மற்றும் பெரும்பாலான நீர் தேக்கங்களில மீன்களை பாதுகாத்தல்

4) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

5) ஊராட்சிகளில் மீன் வளர்ச்சி

6) பெரிய நீாத் தேக்கத்தில மீன் பிடிப்பு

7) ஊரக மீன் வளர்ப்பு விளக்கக் குளங்கள்

8) உள்நாட்டு நீர் நிலையில் மீன் வளர்ப்பு துறை மூலம் மீன் வளர்ப்பு

04. கடல் மீன் உற்பத்தியைப் பொருத்தமட்டில் கடலில் உள்ள மீன் வளத்தை பெரும் அளவில் பயன்படுத்திக் கொள்வதே முக்கிய நோக்கமாகும். 1951–52 இல் 46,000 டன்களாக இருந்த கடல் மீன் உற்பத்தியானது 1994–95 இல் 3,31,000 டன்களாக உயர்ந்தது. கடல் மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகின்றது. அவையாவன (1) நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கலுக்கு மான்யம் வழங்குதல் (2) கண்ணாடி இழை கட்டு மரங்கள் வாங்க மீனவர்களுக்கு மான்யம் வழங்குதல் (3) கட்டுமரங்களை வேதியியல் முறைப்படி பராமரித்தல்

05. மீனவர்களின் நலனுக்காக பல்வேறுபட்ட நலவாழ்வுத் திட்டங்களை மாநில அரசு செயற்படுத்தி வருகின்றது. பின்வருவன சில முக்கியமான திட்டங்களாகும்.

1) மீனவருக்கான இலவச வீட்டுவசதித் திட்டம்

2) தொகுதி காப்புறுதித் திட்டம்

3) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

4) மிகு வேக டீசல் எண்ணெய் மீதான ஆயத்தீர்வையை ஈடு செய்தல்

06. உள்நாட்டு, கடல் நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு நடவடிக்கைகள் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே இந்தியாவில் முறைப்படுத்தப்பட்டன. 1897 ஆம் ஆண்டில் இந்திய மீன் வளர்ப்புச் சட்டமும் 1929ஆம் ஆண்டின் சென்னை மீன் வளர்ப்புத் திருத்த சட்டமும் அரசு மற்றும் தனிப்பட்ட நீர் நிலைகளில் மீன் பிடிப்பு உரிமையிலிருப்பதற்கு வகை செய்கின்றன. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் (தமிழ்நாடு சட்டம் XXXV 1958)/ 1983 ஆம் ஆண்டு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களில் மீன் பிடி விதிகளின் குத்தகை மற்றம் மீன் வளர்ப்பு உரிமைகளின் உரிமம் குறித்த திருத்தங்களிலும் "மீன் பிடிப்பு குத்தகைக்குரிய உரிமம்" என்பது குறித்தும் மீன் பிடிப்பு உரிமைகளை ஏலத்தில் விடுவதற்குத் தகுதியுடைய அதிகாரம் பெற்றவர் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

07. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், ஊரக மீன் விளக்கச் செயல் முறை, ஊராட்சி குளங்கள் போன்றவற்றில் தீவிர மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு மீன் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திய பின்னர் நீர் நிலை அமைப்புகளை நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கான தேவை இன்றியமையாததாகி விட்டது. அதற்கேற்ப, தமிழ்நாடு அரசு 17–11–1993 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 332 இல் மீன் பிடிப்பதற்குரிய குத்தகையினை ஓராண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு உயர்த்தியுள்ளது. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பொது ஏலத்தில் பங்கு பெறும். பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, ஊராட்சித் துறை ஆகியவற்றிற்கு சொந்தமான நீர்நிலை அமைப்புகள் இவ்வரசாணையில் அடங்குவதாகும்.

08. 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 132 ஆவது பிரிவு மீன் பிடி உரிமைகளை ஊராட்சிகளுக்கு வழங்க அதிகாரம் அளித்து பின்வருமாறு தெரிவிக்கின்றது. கிராமக் குடிகளின் பொது நன்மைக்காக நிர்வகிக்கப்படும் அல்லது பழக்க வழக்கப்படி அவர்கள் உடமையானதாக கருதப்படும். மீன்பிடிக்கும் உரிமை உள்பட சொத்து அல்லது வருமானம் அல்லது ஊர் நிலத்தைப் பொதுவாக அனுபவிப்பவருடைய உரிமை வருமானம் அல்லது குறிப்பிட்ட நிலத்தை அனுபவிப்பருடைய உரிமை வருமானம் அல்லது ஒரு குறிப்பிட்ட நீர்ப்பாசன ஆதாரத்தில் உள்ள நிலத்தை அனுபவிப்பவர்களுடைய உரிமை, வருமானம் ஆகிய இவை, அரசு அதற்கென ஒரு அறிக்கை வெளியிட்டால் ஊராட்சியை சேரும். இதை ஊராட்சி அதன் மக்களுக்கு அல்லது உடமையாளர்களுக்கு நன்மை பயக்கும்படி நிர்வகித்து வர வேண்டும்". மேலும், மேற்கூறிய சட்டத்தின் 133(3) வது பிரிவின் கீழ் பாசன பராமரிப்பு பணியினை ஊராட்சிகளுக்கு அரசால் மாற்றம் செய்யப்படுகின்ற போது மீன்பிடிக்கும் அதிகார உரிமையும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்க வழிவகை செய்கிறது. அப்பிரிவு பின்வருமாறு தெரிவிக்கின்றது. "நீர்ப்பாசன அமைப்பின் பாதுகாப்பு இந்தப் பிரிவின்படி மாற்றப்படும்போது அவ்வமைப்பிலுள்ள அரசாங்கத்தின் மீன் பிடிக்கும் உரிமையும் மாற்றப்பட்டு நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் கட்டுப்பாடுகளுக்கு (இந்த வருமானத்தை உபயோகிக்க உண்டான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்பட) உட்பட்டு தக்கவாறாகப் ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சியை சேரும்.

09. ஒட்டு மொத்த மீன் வளர்ச்சிக்கும் மற்றும் மீனவர் நலனுக்கும் உரிய திட்டங்களை வளர்ப்பதற்கு பொறுப்பினை மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையை மாவட்ட ஊராட்சி அமைக்கும். மாவட்ட ஊராட்சி வேளாண்மை நிலைக்குழுவும் மீன்வளத் திட்டங்களை ஆய்வு செய்ய வேணடும். ஊராட்சி ஒன்றயம் எலலாத் திட்டங்களையும் மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள். பயிற்சி. உள்நாட்டு மற்றும் கடல் மீன்வள எல்லைக்குபட்பட்ட திட்டங்களில் பயன்பெறும் நபர்களை தேர்ந்தெடுத்தல் போன்ற திட்டங்களை செயலாக்க வேண்டும். ஊராட்சியின் கீழ் உள்ள மீன் வளாப்பு குளம் குட்டைகளை மேம்படுத்தவும், மீனவர்களுக்கு அரசு உதவியுடன் கூடிய இலவச வீடு வழங்கும் திட்டத்தின் பயன்பெறும் நபர்களை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு அதிகாரம் வழங்குதல் வேண்டும். ஊராட்சியில் சுகாதார அடிப்படையில் மீன் விற்பனைக்கூடங்களை அமைக்க உறுதுணையாக இருக்க வேண்டும். ஊராட்சி, மீனவ குடும்பங்களுக்கு இயற்கையின் இடையூறினால் ஏற்படும் பேரிழப்பை மதிப்பீடு செய்ய வேண்டும். மீன்பிடி தொழில், குத்தகை மற்றும் விற்பனை ஆகியவற்றில் காலந்தொட்டு மதித்து வரும் மரபு வழியை மதித்து ஆவணப்படுத்தலாம்.

மேற்கூறியவற்றின் பின்னணியில் மூன்று அடுக்கு ஊரக ஊராட்சி அமைப்புகளுக்கு கீழ்காணும் அதிகாரங்களை ஒப்படைக்கப் பரிந்துரைக்கப் படுகிறது.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. உள்நாட்டு மீன் வளங்களின் வளர்ச்சி | 1. மீன்வளத்திற்காக கிராம குளம்/குட்டைகளை மேம்படுத்துதல் |
| | 2. கூட்டுறவுச் சங்கங்கள்/மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளிட்ட மீனவருக்குக் கிராம குட்டை குளங்களைக் குத்தகைக்கு விடுதல். |
| | 3. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் / உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஆகியவை போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவியளிக்க உரிய நபர்களைக் கண்டறிதல். |
| | 4. அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் மீன் பிடி உரிமம் பெறுவதற்குரியவர்களைக் கண்டறிதல் |
| | 5. படகுகள், வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி தளவாடப் பொருட்களை ஊராட்சி ஒன்றியம் வழங்குவதற்கியலும் வகையில் தகுந்தவர்களைக் கண்டறிதல் |
| 2. கடல் மீன் வள மேம்பாடு | 1. படகுகள்/வலைகள் மீன்பிடி தளவாடங்களை ஆட்களுக்கும் கூட்டுறவுச் சங்களுக்கும் வழங்குவதில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு உதவுதல் மற்றும் தகுந்தவர்களைக் கண்டறிதல். |
| | 2. கடும் வானிலைக் காலத்தில் விழிப்புணர்வு ஊட்டவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் விழிப்புணர்வு முகாம் களுக்கு ஏற்பாடு செய்தல். |
| | 3. கிராமச் சூழ்நிலையில் கடல்வாழ் உயிரின வளர்ச்சியின் பயனைக் கண்காணித்தல் ஊராட்சி ஒன்றியக்குழு மாவட்ட ஊராட்சியின் ஒருங்கிணைப்புடன் கட்டுப்பாடு பற்றி தொடர் நடவடிக்கை எடுத்தல். |
| 3. விற்பனை மேம்பாட்டிறகான உள்ளமைப்புச் செயல்முறை | 1. சுகாதாரச் சூழலில் மீன் கடைகளை அமைப்பதையும், அங்காடியில் விற்கப்படும் மீன்கள் தரத்தை ஆய்வு செய்ய ஏற்பாடு செய்வதையும் ஊக்குவித்தல் |
| | 2. மீனைப் பதப்படுத்தும் பிரிவுகளையும் மீனவர் மற்றும் மீன் பதனம் செய்யும் பிரிவுகளுக்கிடையே சீரான நல்லுறவை ஏற்படுத்தவும் ஊக்குவித்தல். |
| 4. மீனவர் நல நடவடிக்கைகள் | 1. தொகுதி காப்புறுதித் திட்டங்களில் மீனவர் சேர்ந்து கொள்வதை ஊக்குவித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | 2. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இழப்பு/சேதம் குறித்து மதிபபீடு செய்வதிலும் தேவைப்படும் இடஉதவி அளிப்பதிலும் உதவுதல். |
| | 3. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தை உயர்வடையச் செய்தல் மற்றும் தகுதியான மீனவர்களைக் கண்டறிதல். |
| | 4. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை மேம்படுத்துதல் |
| | 5. மிக வேக டீசல் எண்ணெய் மற்றும் இதர முதலீடுகளுக்கு ஆயத்தீர்வை ஈடு செய்து வழங்கும் பணிகளை எளிதாக்க வசதி செய்தல் |

## III. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்துதல் | 1. மீன்வளர்ப்பு குட்டை/குளங்கள் மேம் படுத்தும் திட்டங்களை செயற்படுத்துதல். |
| | 2. மீனவ நலம் நாடும் வளத்திட்டங்களைக் கண்டறிந்து ஒப்பளித்தல். |
| | 3. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலிருக்கும் மீனவருக்குப் பயிற்சியளிக்கும் அமைப்பை ஏற்படுத்த மீன்துறைக்கு உதவுதல் |
| | 4. மீனவர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு வசதி செய்தல் |
| | 5. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றவர்களுக்கும் படகுகள், வலைகள், கருவிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மற்றும் பிற உதவிகளைச் செய்து வழங்குதல் |
| | 6. ஊராட்சி ஒன்றிய குளங்களிலும் நீர் தேக்க ஆதாரங்களிலும் ஊராட்சி ஒன்றியமானது மீன்பிடி குத்தகைக்கு கட்டணங்களை விதித்தல். |
| 2. கடல் மீன்வளத்தை மேம்படுத்துதல் | 1. தொடர்புடைய சிற்றாட்சியுடன் கலந்து கடல் வாழ் உயிரின வளர்ப்பு / உவர்நீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றிற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல். |
| | 2. பல்வேறு திட்டங்களின் கீழ் உதவி பெறுபவர்களை தேர்ந்தெடுத்தல் |
| | 3. கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வசதி செய்தல் |
| | 4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் படகுகளையும் தளவாடங்களையும் ஒப்பளித்து வழங்க உதவுதல். |

| நடவடிக்கை | அதிகாரப் ஒப்படைப்பு |
|---|---|
| | 5. மீன் பிடிதளம், காயவைக்கும் இடம், சூறாவளி, புகலிடங்கள் ஆகியவற்றைப் பராமரித்தலும் கட்டுப்படுத்துதலும். |
| 3. விற்பனை மேம்பாட்டிற்கான உள்ளமைப்புச் செயல் முறை | 1. மீன் குளிர்பதனக் கிடங்கு, மீன் பதப்படுத்துதல், சிப்பங் கட்டுதல் பாதுகாத்தல் ஆகியவற்றில் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிச் செய்தல். |
| 4. நல நடவடிக்கைகள் | 1. நலவாழ்வு திட்டங்கள், தொகுதி காப்புறுதி திட்டங்கள் மீனவர்களுக்கு மேம்பாட்டிற்கு உதவுதல். |
| | 2. இயற்கை சேதங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல். |
| 5. உள்நாட்டு கடல் மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு திட்டங்களை ஆய்வு செய்தல் | 1. அரசு துறையின் அதிகார எல்லைக்குள் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஆய்வு செய்தல் மீன் துறையின் உதவி இயக்குநர், மீன் வளர்ப்பேர் மேம்பாட்டு முகமை, உவர் நீர் மீன் வளர்ப்போர் முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அலுவலரின் அதிகார எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியக் குழுவின் சீராய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | அதிகாரப் ஒப்படைப்பு |
|---|---|
| 1. மாவட்டத்திற்காக மீன் வள மேம்பாட்டிற்குத் திட்டமிடல் | 1. மாவட்டத்தில் மீன்பிடிப்பவர்கள் நலன் உட்பட ஒட்டுமொத்த மீன் வளமேம்பாட்டிற் கான திட்டங்களைத் தயாரித்தல் |
| 2. மீனவளர்ப்போர் முகமை மற்றும் உவர்நீரின் மீன் வளர்ப்போர் வளர்ப்பு முகமை | 1. தொடர்புடைய மாவட்டத்திற்கான மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மாவட்ட ஊராட்சியின் கீழ் வரும். ஏற்கனவே உள்ளவை மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். மாவட்ட ஊராட்சியின் தலைவர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தலைவராகவும் இருப்பார். |
| 3. மீன்வளத் திட்டங்களை சீராய்வு செய்தல் | 1. உணவு மற்றும் வேளாண்மை நிலைக்குழுவானது மீன்வளம் மீனவர் தொடர்பிலான அனைத்துத் திட்டங்களை சீராய்வு செய்து காலமுறைப்படி அரசுக்கு அறிவுரை வழங்கும். |

### நிருவாக மற்றும் நிதிச்சிக்கல்கள்

10. தற்போது மீன்வள நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிலையில் மண்டல உதவி இயக்குநரால் கவனிக்கப்படுகின்றன. மீன்வளாப்பின் குறிப்பிட்ட சில திட்டங்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் கவனிக்கப்படுகின்றன. சிற்றூராட்சிக்ககாகப் பரிந்துரைக் கப்பட்ட மீனவள நடவடிக்கைகளுக்குத் தொழில் நுட்பப் பணியாளர் எவரும் தேவைப்படவில்லை. இந்த இரண்டு அடுக்கு ஊராட்சி அமைப்பில் மீன்துறை உதவி ஆய்வாளர் ஒருவர், மீன்வள நடவடிக்கைககளை முறையாகச் செயல்படுத்துவதற்கு உதவுவதற்காக அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு நியமிக்கப் பெறுவர். எனினும் ஊராட்சி ஒன்றியக் குழுவால்

மீன் வளத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக மீன்துறை உதவி இயக்குநர் அதற்குரிய முன்னேற்ற அறிக்கைகளை மற்றும் பிரச்சனைகளை அளிப்பதற்கு பொறுப்பாவார்.

11. நிருவாகச் சீர்திருத்த ஆணையின் (1973) பரிந்துரைகளின் படி முன்னுரிமை அடிப்படையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகை அளிக்கும் தற்போதைய நடவடிக்கைக்குப் பதிலாக மீன்பிடிக் குத்தகையை பொது ஏலத்தில் விடுவதற்குச் சிற்றூராட்சிகளுக்கு அனுமதிக்கலாம். இவ்விவரம் தாமோதரன் குழுவாலும் (1990) மாநில நிதிக் குழுவாலும் ஆய்வு செய்யப்பட்டன.

12. ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதியம் குறித்த தாமோதரன் குழுவின் அறிக்கை (1990) மீன்பிடி குத்தகையின் மீது கீழ்கண்ட 3 பரிந்துரைகளை அளித்துள்ளது. அவை வருமாறு :–

(அ) ஒப்பளிப்பானது ஊராட்சியால் மட்டும் செய்யப்பட வேண்டுமென ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது. முறையாகச் செயற்படுத்தப் படுவதற்கு, ஊராட்சி ஒனறியக்குழு, ஊராட்சி மற்றும் அரசு ஆகியவற்றின் காப்பாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பெற வேண்டும்.

(ஆ) குழுவின் தீர்மானம் தகுந்ததாக இல்லை என்று அறியப்படும் தேர்வுகளில் எந்த ஒரு குத்தகையாளர் எவ்வகை முன்னுரிமையும் அளிப்பதற்கு மாவட்டாட்சியருக்கு அதிகாரம் உண்டு.

(இ) பெரிய ஏரிகளுக்காக குத்தகை தேர்வில் தொடர்புள்ள துறை அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் சார்பாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றால் ஏலம் நடத்தப் பெற வேண்டும். பெரிய ஏரிகளிலிருந்து மீன் வள வருவாய் தேர்வில், மொத்த வருவாயில் 50 விழுக்காடு தொடர்புள்ள ஊராட்சிகளுக்கிடையே பங்கீடு செய்வதற்கு ஒதுக்கப் பெறலாம். மீதமுள்ள 50 விழுக்காட்டைத் துறையால் ஒதுக்கம் செய்யப் பெறலாம். ஏரியானது ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்குள் அமைந்திருக்குமாயின் பங்குத் தொகையைத் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே தனிநபர் அடிப்படையில் பங்கிட்டு அளிக்கப் பெறலாம்.

13. மாநில நிதிக் குழு (1996) மீன்பிடிக் குத்தகையின் நோக்கங்களை தாமோதரன் குழுவின் கருத்துக்களை மேம்படுத்தவும் விரிவான அளவில் ஆய்ந்தது. அவை வருமாறு :–

ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையிலுள்ள ஏரிகளில் மீன் ஏலம் விடும் உரிமை வருவாய்த் துறையால் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வாறே பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஏரிகளும் அமைப்புக் கால்வாய்களும் மீன்துறையால் அல்லது மீன்வள மேம்பாட்டுக் கழகத்தால் ஏலத்தில் விடப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையிலுள்ள ஏரிகள் தொடர்பிலான ஏலத் தொகையையானது தொடர்புடைய சிற்றூராட்சிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அப்பகுதியிலுள்ள மீன் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பங்குத் தொகையை அளிப்பதற்கு அரசு ஆதரவாக உள்ளது. உள்ளபடியே உள்ளாட்சி அமைப்புகள், தங்களின் சொந்த முறைகளைக் கொண்டு வருவாயைக் கைவரப்பெறுவதில் எப்பங்கினையும் வகிக்கவில்லை. தாமோதரன் குழு (1990) அறிக்கையில் போலிச் சங்கங்கள், லஞ்சக் கூட்டு நடவடிக்கையில் அமைக்கப்பட்டு, குத்தகைதாரரால் அதிக அளவில் ஆதாயங்கள் பெற்ற போதிலும் குறைந்த குத்தகைக்கு எடுக்கப்பட்டு உள்ளூர் சமுதாயத்தினருக்கு அவர்களின் பொது நோக்கங்களுக்கு அதிலிருந்து சிறு பகுதியை வழங்கப்பட்டதுடன் மீதமுள்ளது போலிச் சங்கங்களுடன் தொடர்புடையவர்களால் பங்கீடு கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு திரட்டப் பெற்ற சொற்பத் தொகையும் தொடர்புடைய சிற்றூராட்சிகளுக்கு முறையாக அனுமதிக்கப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏலம் விடுவதற்குரிய

அதிகாரம் தேவைப்படுகிறது. இதனால் உள்ளாட்சி அமைப்பின் வள ஆதாரங்களை பெருக்குவதற்கான சாத்தியக் கூறு உள்ளது. சங்கங்களும் கூட ஏனைய ஏலதாரர்களுடன் போட்டியிட முடியும் என்றாலும் அதனைச் சங்கம் மட்டும் குத்தகையில் பெறுவதற்கான தனியுரிமை வரையறை இருக்கக்கூடாது என்று மாநில நிதிக் குழு கருதுகிறது. அத்தகைய உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களை ஏலம் விடுவதற்குரிய அதிகாரம் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் தேவைப்பட்டால், ஊராட்சிகளின் காப்பாளர்கள் மற்றும் அலுவலர்களடங்கிய குழுவொன்றை முறையான செயலாக்கத்திற்காக அமைக்கப் பெறலாம் என்றும் முறையாகப் செயற்படாவிடத்து அதில் தலையிடுவற்கு மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரங்களை அளிக்கலாம் என்றும் மாநில நிதிக் குழு வலியுறுத்த விரும்புகிறது.

14. பொதுப்பணித்துறை ஏரிகள் தொடர்பில் கூட ஆதாயப் பங்கானது வட்டார ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் படி இருக்க வேண்டும். மேலும் குத்தகையை மேற்பார்வையிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். இதனால் குறைந்தது எதிர்காலத்தில் விடப்படும் குத்தகைத் தொகைக்கும் அதிகமான சுரண்டலைக் கண்காணித்து கவனத்துக்குக் கெண்டு வர இயலும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் அமைந்துள்ள பெரிய ஏரிகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாளர்களைக் கொண்டுள்ள குழு ஒன்றின் வாயிலாக ஏலத்தை மேற்கொண்டு ஆய்வாளாரால்/ மாவட்டாட்சி–யாளரால் அனுமதியிடப் பெறும் வீதங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாம்.

பரிந்துரைகள் :

மாநில நிதிக் குழு பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கின்றது. 1) உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய சொத்துக்களை ஏலம் விடும் அதிகாரம் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பிடம் மட்டுமே இருக்க வேண்டும். தேவைப்பட்டால் ஊராட்சிகளின் சார்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றை முறையான செயலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கலாம். முறையாகச் செயற்படுத்தாத இடத்தில் மாவட்டாட்சியாளர்கள் தலையிடுவதற்கு அதிகாரங்களை அளிக்கலாம். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு கூட்டுறவு முகமைகளும் மற்றவர்களுடன் கூட ஏலம் கேட்பவராக இருக்கலாம். ஆனால் அவற்றிற்குத் தனியுரிமை வழங்கக் கூடாது. 2) பொதுப்பணித்துறை ஏரிகள் தொடர்பில் கூட ஆதாயப் பங்கொன்று உள்ளாட்சிகளுக்குக் கிடைக்க கூடியதாகப்பட வேண்டும். அத்துடன் உள்ளாட்சி அமைப்புக்கள் குத்தகையை மேற்பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இதனால் அளவிற்கதிமான சுரண்டல் கண்காணிக்கப்பட்டு எதிர் காலத்தில் அத்தகையவர்களுக்கு குத்தகைகளை அளிப்பதைத் தவிர்ப்பதற்காகக் கவனித்துக் கொண்டு வர இயலும். 3) ஒன்றுக்கு ேற்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள பெரிய ஏரிகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் காப்பாளர்களைக் கொண்ட குழு ஒன்றின் வாயிலாக ஏலத்தை மேற்கொள்ளலாம். இதன் ஆதாயத்தை ஆய்வாளரால் / மாவட்டாட்சியரால் அறுதியிடப் பெறும் வீதங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பங்கிடப்படலாம்.

15. மாநில நிதிக் குழு பரிந்துரையைக் கருத்தில் கொண்டு மாநில திட்டக்குழுப் பிரிவானது அவற்றை மேம்படுத்தி, அம்மூன்று பரிந்துரைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஊராட்சிகளின் ஆய்வாளராக இருக்கும் மாவட்டாட்சியருக்கான முறைப்படுத்திய அதிகாரமானது தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் போற்றிப் பேணப்பட வேண்டும் என்றும், ஊராட்சி மீன்பிடி வாடகைகளைப் பங்கிடுவதைக் கண்காணித்து நடுவராக இருக்கும் பங்கு, மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப் பெற வேண்டும் என்றும் இப்பிரிவு பரிந்துரைக்கப்டுகிறது.

**சட்டசிக்கல்கள்**

16. சிற்றூராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் உரிமையில் உள்ள மீன்பிடி உரிமை உள்ளிட்ட சொத்து அல்லது வருவாய் எதையும் சிற்றூராட்சியால்/ஊராட்சி ஒன்றியத்தால் நிருவகிக்கப்படுவதற்கு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளர்போர் மேம்பாட்டு முகமைத் திட்டங்கள், அண்மைக் காலத்தில் மீன்வள மேம்பாட்டில் தடைகளின்றி முன்னேறும் நிலைமை அடைந்துள்ளது. அறிவியலடிப்பபடையில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள மீனவரிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுவான நீர்நிலைகளில், ஊராட்சி ஏரிகளில் மீன்பிடி உரிமைக் குத்தகையை எடுத்துக் கொள்வதற்குக் கடுமையான போட்டி உள்ளது. மேலும் குத்தகைத் தொகையும், ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்தின் வருவாயைப் பெருக்குவதற்கேற்ப பன்மடங்காக அதிகரித்துள்ளது. எனவே, மீன் வளர்ப்பு, மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் விற்பனைகளைப் பல்வேறு திட்டங்களின் கீழ் மானியங்களை ஒப்பளிப்பதற்கான பயன்களை அறிவதற்கு, ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகாரம் வழங்குவது இன்றியமையாததாகும்.

17. தற்போது மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கி வருகிறது. மீன்வளர்ப்பு மேம்பாடு முகமையின் நிர்வாகச் சுமையிலிருந்து மாவட்ட ஆட்சியரை விடுவிக்கும் பொருட்டு மாவட்ட ஊராட்சி தலைவரை மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமையின் தலைவராக்க வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. முகமையின் நிர்வாகக் குழுவை சீரமைக்க உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்துவது அவசியம். இவ்ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாவட்டத்திலுள்ள மீன் வளர்ப்போர் பிரதிநிதி கள் (குறைந்தது மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்கு) உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் தொழில நுட்ப ரீதியில் மீன் வளர்க்கப் பயன்படும் குளங்கள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமையானவை. எனவே நிர்வாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் குழுவில் சேர்ப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. உள்நாட்டு மீனவர், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பிரதிநிகிள் உறுப்பினர்களாக சேர்த்து உறுப்பினர் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதால் அவர்களுக்குள்ளேயே ஒரு தலைவரை தேர்ந்தெடுத்து கொள்ள வழி ஏற்படும் என்றும் மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமை வலிவோடு இயங்குவதற்கு அதற்குரிய சொந்த தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும். அத்துடன் கிராமங்களில் விற்கப்படும் மீன்களின் தரத்தை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரங்களை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க பரிந்துரைக்கப்படுகிறது. அதற்குரிய தேவையான அதிகாரங்களை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கலாம்.